**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 174** **நாள்: 03.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக, பன்றிக் காய்ச்சல் சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக பன்றிக் காய்ச்சல் மற்றும் டெங்கு போன்ற நோய்கள் உருவாகின்ற விதம் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து கல்வி நிறுவனங்கள், குடிசைப்பகுதிகள் மற்றும் பொது இடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

இதில் சிறப்பு நிகழ்வாக, 02.11.2018 அன்று அடையாறு மண்டலம், சைதாப்பேட்டை, அன்னை வேளாங்கண்ணி மேல்நிலைப்பள்ளியில் பன்றிக் காய்ச்சல் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு முகாமில் சுமார் 1100 மாணவ, மாணவிகள், 50 ஆசிரியப் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, பன்றிக் காய்ச்சல் நோய் எவ்வாறு பரவுகிறது, அதன் அறிகுறிகள், அதனை வராமல் தடுக்கும் முறைகள், மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், கைகளை முறையாக தொடர்ந்து 20 வினாடிகள் சோப்பு உபயோகித்து கழுவினால் 80 சதவீதம் H1N1 கிருமிகளை பரவாமல் அழிக்க முடியும் என்பது குறித்து மாணவ, மாணவிகளுக்கு விளக்கப்பட்டது. மேலும், அடிக்கடி சோப்பு போட்டு, கைகளை நன்றாக கழுவ வேண்டும். இருமும் போதும், தும்மும் போதும், கைக்குட்டையால் முகத்தை மறைத்து கொள்ள வேண்டும். சளி, இருமல், தொண்டை வலி, காய்ச்சல், தலைவலி முதலியன இந்நோயின் முக்கிய அறிகுறிகளாகும். இதுபோன்ற அறிகுறிகள் தென்பட்டால், உடனே அருகில் உள்ள மாநகராட்சி மற்றும் அரசு மருத்துவமனைகளை அணுக வேண்டும். சுயமாக மருந்துகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும் என்றும் எடுத்து கூறப்பட்டது. இம்முகாமில், நோய்த்தடுப்பு விளம்பர பேனர்கள் வைக்கப்பட்டு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசுக்களின் வாழ்க்கை சுழற்சி, அதனை உருவாகாமல் தடுக்கும் முறைகள் குறித்தும், கொசுப்புழு, கூட்டுப்புழு, வளர்ந்த கொசு ஆகியவற்றை கண்காட்சியில் வைத்தும் விளக்கப்பட்டது. மாணவ, மாணவியர்கள் அனைவரும் சுகாதார தூதர்களாக அறிவிக்கப்பட்டு, சுகாதார தூதர் அட்டைகள் வழங்கப்பட்டது.

பின்னர், மாணவ, மாணவியர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாநகராட்சி ஊழியர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மாணவ, மாணவிகள் பன்றிக் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சலை சம்பந்தமான விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, கோஷத்துடன் அருகாமையில் உள்ள அனைத்து தெருக்களிலும் ஊர்வலமாக சென்று பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்ட்டது .

இந்த விழிப்புணர்வு முகாமில், மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர். டி.ஜி.சீனிவாசன், பள்ளியின் தாளாளர் Dr. D. தேவராஜ், பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஜி. தங்கராஜ், தலைமையாசிரியர், ஆசிரிய பெருமக்கள், சுகாதார ஆய்வாளர் S. ராமையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**